SYDNEY WEST Area Health Service

Produced by Sydney West Area Health Service,
Multicultural Health Network & NSW Multicultural
Health Communication Service.

**BHC6975 Protecting Children and Young Peope and reporting to the Department of Community Services – Tamil**

# பிள்ளைகளையும் இளவயதினரையும் பாதுகாத்தல் மற்றும் சமூகச் சேவைகள் திணைக்களத்திற்கு முறையிடுதல்

பின்வரும் கட்டுரை நி தெ வே (NSW) உடல்நலத் திணைக்களத்தால் பிரசுரிக்கப்பட்டது.

சில சமயங்களில் பிள்ளைகளை உடலநலச் சேவைகளுக்கு எடுத்துச் செல்வது பெற்றோருக்கு ஒரு கடினமான அனுபவமாக இருக்கக்கூடும். ஒரு உடல்நலத் தொழிலாளி ஒரு பிள்ளையின் நலத்தில் அக்கறை கொண்டு சமூகச் சேவைகள் திணைக்களத்தை (டி ஓ சி எஸ்) தொடர்பு கொள்ள நேர்ந்தால் இதை மேலும் கடினமாக்கும்.

பிள்ளைகள் மற்றும் இளவயதினர் (கவனிப்பும் பாதுகாப்பும்) 1998 ம் ஆண்டுச் சட்டத்தின்படி எல்லா உடல்நலத் தொழிலாளிகளும் ஒரு பிள்ளை தவறாக நடத்தப்படுதல் அல்லது புறக்கணிக்கப் படுதல் ஆகிய அபாயத்தில் இருக்கிறார்கள் என்று அக்கறைப்பட்டால் இதை டி ஓ சி எஸ் ற்கு முறையிடவேண்டும் என்பதை பெற்றோர்கள் புரிந்து கொள்ள வேண்டியது முக்கியம். ஒரு பிள்ளை அபாயத்தில் இருக்கிறார் என்பதற்கு அறிகுறிகள் இருந்தால் உடல் நலத் தொழிலாளிக்கு இதை முறையிடுவதைத் தவிர வேறு வழி ஒன்றும் இல்லை. இது பெற்றோருக்கு குழப்பத்தை ஏற்படுத்துவதுமல்லாமல் உடல்நலத் தொழிலாளிக்கும் கஸ்டத்தை விளைவிக்கும்.

பிள்ளைகள் அல்லது இளவயதினர் பின்வரும் காரணிகளால் பாதிக்கப்பட்டால் அல்லது பாதிக்கப்படவிருந்தால் அவர்கள் 'அபாயத்தில்' இருக்கிறார்கள்:

- சரீரம் அல்லது பாலியல் சம்பந்தமாக தவறாகப் பயன்படுத்தப்படல் அல்லது தவறாக நடத்தப்படல்
- குடும்ப வன்முறை இருக்கும் வீட்டில் குடியிருத்தல்
- அவர்களின் பெற்றோரின் நடத்தையின் காரணமாக கடுமையான மனரீதியான தீமையினால் துன்பப்படல்
- உணவு, பாதுகாப்பு, உடை, மற்றும் அன்பு ஆகிய பிரதானமான விடயங்களைப் பெறாதிருத்தல்
- அல்லது அவர்களைக் கவனிக்கும் நபர்கள் வைத்தியக் கவனிப்பை ஒழுங்கு செய்ய இயலாமல் அல்லது விரும்பாமல் இருத்தல்

பல்கலாச்சார உடல்நலத் தொடர்பு சேவையினால் பிரசுரிக்கப்பட்ட வேறு தகவல் அட்டைகளில் இநத விடயங்கள் மேலும் கலந்தாய்வு செய்யப்பட்டிருக்கிறது.

உடல்நலத் தொழிலாளிகளின் தொழில், குடும்பங்களுடன் ஒன்று சேர்ந்து வேலைசெய்து அவர்கள் ஆரோக்கிமாக இருக்க உதவுவது தான். அநேகமான நேரங்களில் உடல்நலத் தொழிலாளி டி ஓ சி எஸ் ற்கு முறையிட வேண்டியிருந்தாலும் அவர் தொடர்ந்து குடும்பத்துடன் சேர்ந்து வேலை செய்ய விரும்புவார். உடல்நலத் தொழிலாளியின் வேலை ஒரு பிள்ளை தவறாகப் பயன்படுத்தப்பட்டார் அல்லது புறக்கணிக்கப்பட்டார் என்று நிரூபிப்பதல்ல – இந்த அபாயத்தை டி ஓ சி எஸ் ற்கு முறையிடுவது மட்டும் தான்.

ஒரு பிள்ளை தவறாகப் பயன்படுத்தப்பட்டார் அல்லது இல்லை என்பதை உறுதிசெய்வது டி ஓ சி எஸ் இன் வேலை. ஒரு பிள்ளையின் பாதுகாப்பு, நலம் அல்லது நலமாயிருத்தல் ஆகியவற்றில் கவலையடையும் எவரும் டி ஓ சி எஸ் உதவி லைன் 132-111 (ஆங்கில மொழியில் 24 மணித்தியாலங்கள்) ஐ அழைக்கலாம். ஆங்கிலத்தில் ஒரு அழைப்பை

மேற்கொள்ள உதவி தேவைப்பட்டால் நீங்கள் மொழிபெயர்ப்பு மற்றும் மொழிபெயர்த்துரைக்கும் சேவை (டிஸ்) ஐ 131 450 இல் அழைக்கலாம்.

டி ஓ சி எஸ் குடும்பத்துடன் சம்பந்தப்படுவது அநேகமாக கடினமாக இருந்தாலும் அது ஒரு நேர்மறையான அனுபவமாகவும் இருக்கலாம். ஒரு முறையீடு செய்யப்பட்ட பின்:

- புலனாய்வு செய்யத்தேவையில்லை என்று தீர்மானம் எடுக்கப்படலாம்.
- டீ ஓ சி எஸ் எல்லாம் நலமா என்று அறிய குடும்பத்தைச் சந்திக்கும்.
- பெற்றோருக்கு உதவிசெய்யக்கூடிய வேறு நிறுவனங்களின் சிபாரிசுகள் உட்பட, பிள்ளைகளை பாதுகாப்பாக வைத்திருக்கும் வழிகளைக் கலந்தாயவும், டி ஓ சி எஸ் குடும்பங்களைச் சந்திக்கக் கூடும்.
- சிறிய அளவான குடும்பங்களுக்கு சிறுவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய நீதி மன்ற நடவடிக்கை தேவைப்படும் என்றும் டி ஓ சி எஸ் தீர்மானம் எடுக்கக் கூடும்.

நீங்கள் கூடுதலான உடல்நலத் தகவல்கள் உங்கள் மொழியில் பல்கலாச்சார தொடர்பு இணையத்தளம் http://mhcs.health.nsw.gov.au இல் காணலாம்.

தொலைபேசி எண்கள் பிரசித்த போது சரியாக இருந்தது ஆனால் தொடர்ந்து சரிபார்க்கப்பட மாட்டாது. நீங்கள் தொலைபேசிப் புத்தகத்தில் எண்களைச் சரி பார்க்க வேண்டும்.